**தேயிலை சக்தி நிதியம் - 2019**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

தேயிலை சக்தி நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினதும், 2000 இன் 47 ஆம் இலக்க தேயிலை சக்தி நிதிய சட்டத்தினதும் மற்றும் 1971 இன் 38 நிதிச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரமும் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றை நான் தெரிவிக்கவில்லை.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுப்பிற்குள்ளாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும். 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தை வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா என்பதும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும் மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேயிலை சக்தி நிதியத்திற்கு 1998 ஆம் ஆண்டில் இருந்து 2004 ஆம் ஆண்டு வரை தேயிலைச் தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்குக் கிடைத்த ரூபா 437,505,030 திறைசேரி மானியம் நிலையான சொத்துக்கள் மற்றும் செயற் பாட்டு செலவினங்களுக்காக பயன்படுத்ததும் முறை தொடர்பாக குறித்துரைத்த இனங்காணல் ஒன்று இன்றி மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமம் 20 இன் 12 ஆம் பந்தியின் பிரகாரம் ஒழுங்கு முறைப்படுத்தும் அடிப்படையில் அதாவது மூலதனம் அல்லது வருமான மூலத்தின் அடிப்படையில் பிற்போட்ட வருமானமாக இனங்காணப்படாமல் 2012 ஆம் ஆண்டில் இருந்து 10 வருட காலங்களில் காலக் கழிவு அடிப்படையில் வருடத்திற்கு ரூபா 43,750,503 வீதம் காலக் கழிவு செய்யப் பட்டிருந்தது. மேலும் அந்த திறைசேரி மானியம் எந்த சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்கு, நிர்மாணிப்பதற்கு, நவீனமயப்படுத்துவதற் காக ஈடுபடுத்தப்பட வேண்டும் என்பது, அந்த சொத்துக்களின் பெறுமதி மற்றும் எந்த ஆண்டில் இருந்து பெறுமானத் தேய்வு மேற்கொள்ளல் போன்றவை தொடர்பான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களில் பிற்போட்ட வருமானமாக இனங்காணப்பட்ட ரூபா 43,750,503 பெறுமதியின் சரியான தன்மை | தேயிலை சக்தி நிதியத்திற்காக 1998 முதல் 2004 ஆம் ஆண்டு வரை திறைசேரியின் மூலம் வழங்கப்பட்டிருந்த ரூபா 437.50 மில்லியன் நிதி ஏற்பாட்டின் மூலம் எந்த சொத்தக்களைக் கொள்வனவு செய்வதற்கு / நிர்மாணிப்பதற்கு அல்லது நவீனமயப்படுத்துவதற்கு பயன்படுத்தப்பட வேண்டும் என்பது தொடர்பான அறிக்கை தற்போது தேயிலை சக்தி நிதியத் திடம் காணப்பட வில்லை. எனினும் இறுதிக் கணக்கு அறிக்கையின் பிரகாரம் உரிய சொத்துக்கள் பெறுமானம் செய்யப்பட்ட பிரகாரம் ஆண்டு மற்றும் உரிய விபரங்கள் மாத்திரம் தற்போது நிதியத்திம் உள்ளது. 2024 ஆம் ஆண்டில் இருந்து உரிய நிலமையை கணக்கறிக்கைகளின் மூலம் வெளிப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றதை தயவுடன் அறியத்தருகின்றோம். | திறைசேரி மானியங்கள் நிலையான சொத்துக்கள் மற்றும் செயற்பாட்டு செலவினங்களுக்காக பயன்படுத்தப்படுகின்ற முறை தொடர்பாக குறித்துரைத்த ரீதியில் இனங்கண்டு சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்கு/ நிர்மாணிப்பதற்கு/ நவீனமயப்படுத்துவதற்கு பயன்படுத்தப்பட்ட மானியத்தின் பெறுமதி இலங்கை கணக்கீட்டு நியமம் 20 இன் பிரகாரம் காலக்கழிவு செய்து கணக்குகளில் வைத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பாக கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | | |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 38 இன் 97 ஆம் பந்தியின் பிரகாரம் கற்பனைச் சொத்துக்களைப் பயன்படுத்துவதற்காக தயார் நிலைக்கு கொண்டு வந்த பின்னர் அந்த கற்பனைச் சொத்துக்களின் காலக் கழிவு ஆரம்பிக்க வேண்டியிருந்த போதிலும் 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 2,600,000 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட கணனி மற்றும் மென்பொருள் ஸ்தாபிக்கப்பட்டு மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையில் 09 வருடங்கள் கடந்திருந்த போதிலும் இதுவரை காலக்கழிவு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | உரிய மென்பொருள் தேயிலை சக்தி நிதியத்தால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும் நிதியத்தின் மூலம் இதுவரை அந்த மென்பொருள் பயன்ப டுத்தப்படாதிருந்ததை அவதானிக்கின்றோம். எனினும் 2016 ஆம் ஆண்டின் போது தேயிலை சக்தி நிதியம் மீள் கட்டமைக்கப்பட்ட பின்னர் அவ்வாறான மென்பொருள்கள் தேவை தேயிலை சக்தி நிதியத்திற்காக தற்போது அவதானிக்கப்படவில்லை. அதன் பிரகாரம் இந்த நிலைமையில் உள்ளமை அவதானிக்கப்பட்டதுடன் எதிர்காலத்தில் இது தொடர்பாக தீர்மானம் எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | கற்பனைச் சொத்துக்களைப் பயன்படுத்தவதற்கு பொருத்தமான நிலைக்கு கொண்டு வந்த சந்தர்ப்பத்தில் இருந்து இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் காலக்கழிவு மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2008/2009 மதிப்பீட்டு ஆண்டிற்காக செலுத்தப்பட்ட ரூபா 2,790,822 பொருளாதார சேவைக் கட்டணம், வருமான வரி ஈடுசெய்ய முடியுமாக இருந்த 03 வருட காலத்தை விஞ்சி இருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுமதியின் போதும் பெற வேண்டிய மீதியாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | உரிய ஆண்டின் தேயிலை சக்தி நிதியம் வருமான வரியில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளமையால் வருமன வரியில் ஈடுசெய்யும் சந்தர்ப்பம் இழக்கப்பட் டிருந்தது. அதன் பிரகாரம் எதிர்காலத்தில் இது தொடர்பான தீர்மானம் எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | ஈடுசெய்யும் வசதிகள் காணப்படாத பொருளாதார சேவைக் கட்டணம் புத்தகங்களி லிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நிதியத்தின் சொத்துக்கள் தொடர்பாக நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்தமையாலும், 2016 ஆம் ஆண்டில் நிதியம் மீள் கட்டமைக் கப்பட்டதன் கீழ் தேயிலைச் தொழிற்சாலை தனியார் தரப்பினருக்கு வாடகைக்கு வழங்கப்பட்டமை, வழக்கு நடவடிக்கைகள் காணப்பட்டமை மற்றும் நிலையான சொத்துக்கள் தொடர்பாக போதியளவான கோவைகள் நிதியத்திடம் காணப்படாமையினாலும் நடைமுறையல்லாச் சொத்துக்களை உள்ளடக்கி ரூபா 237,673,325 பெறுமதியான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் ரூபா 27,089,735 ஆன முதலீடு செய்யப்பட்ட | தேயிலை சக்தி நிதியம் நிலையான சொத்துப் பதிவேட்டு நாளதுவரை யாக்காமையினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க முடியாதுள்ளது. உரிய நிலைமையை சரி செய்வதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என தயவுடன் அறியத் தருகின்றோம். | சரியான வகைப்படுத்திலின் கீழ் இனங்காணப்பட்ட நிலையான சொத்துக்கள் தொடர்பாக நாளது வரையாக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடு பேணிச் செல்லப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆதனங்களும் அந்த சொத்துக்களுக்குரிய ரூபா 12,612,507 ஆன மீளாய்வாண்டின் பெறுமானத் தேய்வு செலவினங்கள் தொடர்பாகவும் கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | | |
| (இ) | உடன்படிக்கையின் பிரகாரம் பசறை தேயிலைச் தொழிற்சாலையில் மீளாய் வாண்டிற்குரிய வரி வருமானம் ரூபா 6,410,625 ஆக இருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களில் ரூபா 7,621,125 ஆக இனங்காணப்பட்டமையால் மீளாய்வாண்டின் வரி வருமானம் ரூபா 1,234,875 இனால் மிகைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது. | பஸ்ஸற தொழிற்சாலையுடன் கைச்சாத்திடப்பட்ட முகாமைத்துவ உடன்படிக்கையின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 6,386,250 வாடகை வருமானம் உழைக்கப் பட்டிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களில் அந்த வருமானம் ரூபா 7,621,125 ஆகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2025 இன் நிதிக் கூற்றுக்கள் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | உடன்படிக்கையின் பிரகாரம் அறவிட வேண்டிய வருமானங்களை சரியாக இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | தனியார் தரப்பினருக்கு வாடகைக்கு வழங்கப்பட்ட றைகம கோரள தேயிலை தொழிற்சாலை வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் மாதாந்த வாடகைக் தொகை தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படுகின்ற சகல பூர்த்தி தேயிலைகளின் கிலோவிற்காகவும் ரூபா 8 வீதம் தேயிலை கிலோவின் அளவாக இருந்ததுடன் அது ரூபா 250,000 இற்கு குறையாதிருத்தல் வேண்டுமென குறிப்பி டப்பட்டிருந்த போதிலும் 2016 ஆம் ஆண்டு முதல் இது வரை அந்த வரித் தொகை பெறப்படாதிருந்ததுடன் நிதியத் தால் உரிய வரி வருமானம் நிதிக் கூற்றுக்களிலும் இனங்காணப்பட்டிருக்க வில்லை. | உரிய நிலைமை எதிர்வரும் கணக்கு அறிக்கைகளில் சரிசெய்வதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றது என தயவுடன் அறியத் தருகின்றோம். | உடன்படிக்கையின் நிபந்தனையின் பிரகாரம் அறவிட வேண்டிய வருமானங்களை சரியாக இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டில் கிடைத்த ரூபா 4,560,000 வட்டி வருமானம் செலுத்த வேண்டிய பாதுகாப்பு வைப்பாக நிதிக் கூற்றுக்களில் இனங்காணப்பட்டமையால் அந்த பெறுமதியால் ஆண்டின் நிலையான வைப்புவட்டி வருமானம் குறை மதிப்பீடு செய்து செலுத்த வேண்டிய பாதுகாப்பு வைப்பு மிகைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது. | 2025 ஆம் ஆண்டில் கணக்கறிக்கை மூலம் உரிய சரிசெய்தல்கள் மேற்கொள்ளப்படுகின்ற என தயவுடன் அறியத் தருகின்றோம். | பேரேட்டுக் கணக்குகளின் மூலம் கொடுக்கல் வாங்கல்களை சரியாக சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் நிதியத்தின் நிறுத்திவைத்தல் வைத்தல் மறை மீதி ரூபா 55,013,669 ஆக இருந்த போதிலும் பேரேட்டின் பிரகாரம் அந்த மீதி மறை ரூபா 43,230,024 ஆகும். அதன் பிரகாரம் | பேரேட்டுக் கணக்குகள் நாளதுவரையாக்கப்படா மையின் அடிப்படையில் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதை அவதானிக்கின்றோம். உரிய நிலைமை எதிர்வரும் கணக்கு அறிக்கைகளின் | கணக்காண்டு இறுதித் திகதிவரை நாளது வரையாக்கப்பட்ட பேரேட்டுக் கணக்குகளின் மிதியின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 11,783,645 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | மூலம் சரிசெய்வதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது என தயவுடன் அறியத் தருகின்றோம். | தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | 2019 யூன் 18 ஆம் திகதி தேயிலை சக்தி நிதியத்திற்கு ஊழியர் இழப்பீடு செலுத்துவதற்காக ரூபா 5,123,000 திறை சேரி மானியம் மீளாய்வாண்டின் வருமான மாக மற்றும் அதற்குரிய கொடுப்பனவுகள் ஊழியர் இழப்பீட்டு செலவினமாக நிதிக் கூற்றுக்களை இனங்காணப்படாமல் காசேட்டில் வரவு வைத்தல் மற்றும் ஊழியர் இழப்பீடு செலுத்தும் போது காசேட்டில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | 2025 ஆம் ஆண்டின் கணக்கறிக்கைகளின் மூலம் உரிய சரிசெய்தல்கள் மேற் கொள்ளப்படுமென தயவுடன் அறியத்தருகின்றோம். | நிதியாண்டிற்குரிய வருமானம் மற்றும் செலவினங்கள் சரியாக பேரேட்டுக் கணக்குகளில் கணக்கீடு செய்வதற்கும் நிதிக் கூற்றுக்கள் மூலம் சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | நிதியத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டமொன்றில் ரூபா 2,171,869 மீதியுடன் நடைமுறைக் கணக்கு மீளாய்வாண்டில் மூடப்பட்டமையால் அந்த மீதி நிதியத்திற்கு மாற்றும் போது உரிய செயற்திட்டத்தின் நடைமுறைக் கணக்கு செலவு வைப்பதற்கு பதிலாக செலுத்த வேண்டிய செலவினமாக நிதிக் கூற்றுக்கள் இனங்காணப்பட்டமையால் அப்பெறுமதியால் நடைமுறைப் பொறுப்புக்கள் மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் மிகைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது. | 2025 ஆம் ஆண்டின் கணக்கீட்டு அறிக்கை களின் மூலம் உரிய சரி செய்தல்கள் மேற் கொள்ளப்படுமென அறியத்தருகின்றோம். | கொடுக்கல் வாங்கல்களை சரியாக பேரேட்டுக் கணக்குகள் மூலம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | விடயம் | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | வியாபாரம் மற்றும் ஏனைய பெற வேண்டிய மீதிகள் | 322,058,151 | மீதி உறுதிப்ப படுத்தல், விரிவான பட்டோலை மற்றும் காலப் பகுப்பாய்வு | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். | நிதிக் கூற்றுக் களுடன் பட்டோலைகள் மற்றும் காலப் பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | வியாபாரம் மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகள் | 234,163,519 | | | |
| (இ) | முதிர்ச்சியடைந் த தேயிலை பயிர்ச் செய்கை | 10,002,019 | விரிவான பட்டோலை மற்றும் நிலையான சொத்துப் பதிவேடு | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். | நிதிக் கூற்றுக் களுடன் பட்டோலைகள் மற்றும் காலப் பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | முதிர்ச்சியடையா த தேயிலை பயிற்சை செய்கை | 6,716,358 | | | |

| | | |
|---|---|---|
| (உ) | நடைமுறை வேலைகளின் மீதி | 1,567,205 |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கை | நிதி ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்கு நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2020 முதல் 2024 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் மீளாய்வண்டின் நிதிக் கூற்றுக்கள் 2025 ஆகஸ்ட் 01 திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் 2019 ஆம் ஆண்டின் வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | உரிய நிலைமைகள் எதிர்காலத்தில் சரி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் குறித்துரைத்த காலப் பகுதியில் நிதிக்கூற்றுக்களுடன் வரைவு வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 65,074,453 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 69,356,217 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 4,281,764 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு ஏனைய வருமானம் ரூபா 2,815,484 இனால் குறைவடைந்தமை மற்றும் நிருவாக செலவினம் ரூபா 4,408,481 இனால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2002/2003 மதிப்பீட்டு ஆண்டிற்குரிய செலுத்த வேண்டிய ரூபா 4,545,276 நிறுத்திவைத்தல் வரி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இது தொடர்பாக தீர்மானம் எடுக்கப்படும். | நிலுவையாக இருந்த நிறுத்தி வைத்தல் வரியை செலுத்துவதற்கோ அல்லது தீர்த்து வைப்பதற்கோ விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நிதியத்தால் அமுல்படுத்தப்படுகின்ற ஹொரணை உரக் களஞ்சியம் மற்றும் ஹைகம கோரள தொழிற்சாலை அமைந்துள்ள காணிகளின் உரித்து, தற்போது உரிய பிரதேச செயலாளரின் கீழும் எல்பிட்டிய, இனிந்தும மற்றும் | உரிய நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்ட எழுத்து மூல அங்கீகாரத்தின் அடிப்படையில் அந்த தொழிற்சாலைகளை நிர்மாணிப்பதற்கும் | காணி உரித்தைக் கையேற்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |

பஸ்ஸர என்ற தொழிற்சாலை அமைந்துள்ள காணிகளின் உரித்து காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் கீழும் காணப்படுகின்ற போதும் காணிகளின் உரித்தை சட்ட ரீதியாக நிதியத்திற்கு கையேற்காமல் கட்டிடம் மற்றும் தொழிற்சாலைகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. கையேற்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும் அந்தத் தொழிற்சாலைகள் அமைந்துள்ள காணிகளை சட்ட ரீதியாக கையேற்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றது.